# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 052/மா/2016

ஆணை எண். 284/2017

நாள் : 18/12/2017

22.01.2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி — முறையீட்டு மனுவாகப் பதிவு **செய்யப்பட்ட நாளிதழ் செய்தி**

மண்டல அலுவலர்,
மண்டலம் – 15,
சென்னை மாநகராட்சி. — **எதிர்மனுதாரர்**

22.01.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், சென்னை சோழிங்கநல்லூர் மண்டலம், 193-வது வார்டு துரைப்பாக்கம், குளக்கரை சாலையில் உள்ள பல்சான் நீர்நிலை குறித்து "பல்சான் குட்டையை ஆக்கிரமித்துள்ள வீடுகள், வெள்ளம் ஏற்பட்டும் அதிகாரிகள் அலட்சியம்" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தது. மேற்குறித்த செய்தியினை இம்முறைமன்ற நடுவம் முறையீட்டு மனுவாக ஏற்றுக்கொண்டு, 52/2016 எண்ணிட்ட வழக்காகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செய்தி குறித்து சோழிங்க நல்லூர் மண்டல அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களின் அறிக்கை பெற்று கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், துரைப்பாக்கம், குளக்கரை சாலைப் பகுதியில் உள்ள பல்சான் நீர்நிலை குறித்து கீழ்க்காணும் செய்திகளை தினமலர் நாளிதழ் வெளியிட்டிருந்தது :-

I. பல்சான் குட்டைக்கு அருகில் வசிப்போர் கழிவு நீரை குட்டையில் விடுவது, அதனால் குட்டையில் உள்ள நீர் மாசு அடைந்து கொசு உற்பத்திக்கு காரணமாகஅமைவது ;

2. குட்டையின் கரையோரப் பகுதிகள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி, பலர் வீடுகள் கட்டியுள்ளது ;
3. குட்டை அமைந்துள்ள பகுதியில் சிலர் பாதை வசதி ஏற்படுத்தியதால் குட்டையின் பரப்பளவு குறைந்து கொண்டே போவது.

2. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து 15–வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. 2011–ஆம் ஆண்டு சோழிங்கநல்லூர் பகுதி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டபோது, அப்பகுதியில் உள்ள சாலைகள், கட்டடங்கள் மட்டுமே சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதென்றும், அப்பகுதியில் உள்ள பள்ளிக்கூடம், சத்துணவுக்கூடம் மற்றும் ஏரி குளங்கள் இதுநாள் வரை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை என 13.04.2016 நாளிட்ட கடிதத்தில் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட குட்டை பிற துறை வசமே உள்ளதென்றும், எனினும் பொதுமக்கள் நலன் கருதி குட்டையின் ஓரத்தில் வசிக்கும் மக்கள் தாங்கள் வீட்டு கழிவு நீரை குட்டையில் விடுவதை தடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு உரிய தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். மேலும், அப்பகுதியில் சேரும் குப்பைகள் அகற்றப்பட்டு தேவையான மருந்துகள் சுகாதாரத் துறை மூலம் தெளிக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. இந்நேர்வு சம்பந்தப்பட்ட பல்சான்குட்டை மாநகராட்சி வசம் இன்னும் ஒப்படைக்கப் படவில்லை என 15–வது மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். ஏரி குளங்கள் போன்ற நீர்நிலை ஆதாரங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் இருந்தால் மட்டுமே அவைகள் ஆக்கிரமிப்புக்கு உட்படாமல் பராமரிக்கவும், சுகாதார முறையில் பராமரிக்கவும் அவ்வமைப்பினால் இயலும். பல்சான் குட்டையைப் பொறுத்தமட்டில் அதன் உண்மையான பரப்பளவினை அளவீடு செய்து குறியீடு செய்து தரக்கோரி வருவாய் துறையினை அணுகியுள்ளதாக மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், சம்பந்தப்பட்ட பல்சான் குட்டை, எந்த துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று தெரியாத புதிராகவே உள்ளது. பொதுப்பணித் துறை நீர் ஆதாரப் பொறியாளர் (கீழ் பாலாறு வடிநிலக் கோட்டம்) அவர்கள் தனது 07.12.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி குட்டை புனித தோமையர் ஊராட்சி ஒன்றிய வசமே உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். ஆண்டுகள் இரண்டு கடந்தும் துரைப்பாக்கம் பகுதியில் உள்ள பல்சான் குட்டை எந்தத் துறையின் வசம் உள்ளது எனக் கண்டறிய இயலாதது சம்பந்தப்பட்ட துறைகளின் மெத்தனப் போக்கையே உணர்த்துகிறது. அரசுத் துறைகளின் சீரற்ற நிர்வாகத் தன்மையால் அரசு நிலங்கள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாவதும் பல ஆண்டுகள் கடந்து ஆக்கிரமிப்புக்குள்ளான பகுதி மக்களை வெளியேற்றுவதும் அரசுத் துறைகள் வாடிக்கையாகவே கொண்டுள்ளன. ஆக்கிரமிப்புகளை தொடக்கநிலையிலேயே கண்டறிந்து சம்பந்தப்பட்ட நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றத் தவறும் நிலையில், மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் உயிர் சேதம் மற்றும் பொருட் சேதமும் ஏற்படுகின்றன.

4. எனவே, மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் துரைப்பாக்கம் பகுதியில் உள்ள பல்சான் குட்டை எந்தத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது எனக் கண்டறிந்து அத்துறையினரிடமிருந்து மாநகராட்சி தன் வசம் எடுத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என 15–வது மண்டல அலுவலரைஅறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுசம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 2 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
செயலாளர்.

21.12

21/12/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 15,
சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, சோழிங்கநல்லூர்,
சென்னை – 119.

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சோழிங்கநல்லூர் வட்டம்,
சோழிங்கநல்லூர், சென்னை.

வருவாய் கோட்டாட்சியர்,
தாம்பரம் கோட்டம்,
சென்னை – 45

மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்